# முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No. 120/2018

2025 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18ம் தேதியன்று **PW.2** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திரசேகரன் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதியின் கணவர். நீதிமன்ற அனுமதியின் பெயரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக 1ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மென்ட் சான்றிட்ட நகல் **வாசாஆ** 1. 6.12.2014 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி எழுதி கொடுத்த அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ** 2. நாச்சிமுத்து முதலியாரின் இறப்பு சான்றிதழ் **வாசாஆ** 3. எனக்கும் என் மனைவிக்கும் இடையே நடந்த திருமண பத்திரிக்கை **வாசாஆ** 4.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது** ) ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.